பொருள் எண்: 1

| வார்டு எண் | வாக்குச்சாவடி எண் | வாக்குச்சாவடியின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | அரசுதொடக்கப்பள்ளி,சாஸ்தான்கரை. (பிரதான கட்டிடத்தின் தெற்குபாகம்) |
| 2 | 2(ஆண்) | அரசு நடுநிலைப்பள்ளி.(நடுக்கட்டிடம்) |
| 2 | 2(பெண்) | அரசு நடுநிலைப்பள்ளி.(நடுக்கட்டிடம்) |
| 3 | 3 | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி,குளச்சல் |
| 4 | 4(ஆண்) | கிராம அலுவலகம்,குளச்சல் |
| 4 | 4(பெண்) | வருவாய் ஆய்வாளர் அலுவலகம்,குளச்சல் |
| 4 | 4(அ.வா) | அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி,குளச்சல் |
| 5 | 5 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் மேற்கு பாகம்) |
| 6 | 6 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (நடு கட்டிடம்) |
| 7 | 7 | குழந்தைகள் வளர்ச்சி திட்ட கட்டிடம், கொட்டில்பாடு. (வடக்கு கட்டிடம் கிழக்கு பாகம்) |
| 8 | 8 | துறைமுக அலுவலகம், இந்திராகாலனி |
| 9 | 9 | சத்துணவுகூடம்,மரமடி |
| 10 | 10 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (தெற்கு கட்டிடம் கிழக்குப்பகுதி) |
| 11 | 11 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் நடுப்பக்கம்) |
| 12 | 12 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் மேற்குபக்கம்) |
| 13 | 13 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (பிரதான கட்டிடம் கீழ் மேற்குபக்கம்) |
| 14 | 14 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 15 | 15 | புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, (புதிய கட்டிடம்) |
| 16 | 16 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார். (கிழக்கு பிரதான கட்டிட வடக்கு பக்கம்) |
| 17 | 17 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார் .( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 18 | 18 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி களிமார் .( பிரதான கட்டிட தெற்கு பக்கம்) |
| 19 | 19 | புனித அன்னாள் தொடக்கப்பள்ளி ,களிமார். ( வடக்கு பிரதான கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |
| 20 | 20 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (வடக்கு கட்டித்தின் கிழக்கு பாகம்) |
| 21 | 21 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. (பிரதான கட்டிடத்தின் மேற்கு பாகம்) |
| 22 | 22 | அரசு உயர்நிலைப்பள்ளி, இலப்பவிளை. .(கட்டிடத்தின் கிழக்கு பாகம்) |

| | | |
|---|---|---|
| 23 | 23 | அரசு தொடக்கப்பள்ளி சாஸ்தாங்கரை.<br>(பிரதான கட்டிடத்திடன் வடக்கு பாகம்) |
| 24 | 24 | புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி<br>.(தெற்கு கட்டிடம்) |

மாவட்ட ஆட்சி தலைவர்,நாகர்கோவில் அவர்களால் உள்ளாட்சி தேர்தல் 2017–க்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட வாக்குச்சாவடியின் பட்டியலை மன்றக் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண்.1626 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.1

குளச்சல் நகராட்சியில் வினியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தினை மாதந்தோறும் சோதனை செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலகத்திற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அலுவலகத்திற்கும் அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய சோதனை கூடம் நாகர்கோவில் மூலம் மேற்படி ஆய்வு மேற்கொள்ளுவதற்கு 2017–18 ஆண்டிற்கு ஆகும் உத்தேசச் செலவுத் தொகை ரூ. 35,000/–க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/2945/2009

தீர்மானம் எண்.1627 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 21 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின்மோட்டார்கள் மூலம் 10 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு பிளீச்சிங பவுடர் கலக்கப்பட்டு தினந்தோறும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 2017–18–ஆம் ஆண்டிற்கு பிளீச்சிங பவுடர் வாஙகுவதற்கு உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/1110/2008

தீர்மானம் எண்.1628 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.3

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் 2017–18–ஆண்டிற்கு (மே 2017 முதல் மார்ச் 2018 வரை) ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்திட ஆகும் உத்தேச செலவு ரூ.4,40,000/–க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/2691/2016

தீர்மானம் எண்.1629 அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண் 38984/P1/2014, நாள் 05.01.2017 ம் தேதிய கடிதத்தினில் திடக்கழிவு மேலாண்மையில் திடக்கழிவுகளை விஞ்ஞான ரீதியில் செயலாக்கம் செய்யவும் மறு சுழற்சி மற்றும் நில நிரப்புதலை முற்றிலுமாக தவிர்க்கவும் திடக்கழிவுகளை பயனுள்ள முடிவு பொருட்களாக ( End Product ) மாற்ற கூடுதல் திட்டமிடுதலுடன் அதற்கான தனியார் நிறுவனங்கள் மூலம் கூடுதல் இயந்திரஙகளை நிறுவி பணி மேற்கொள்ள ஏதுவாக இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கான ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/454/2017

**தீர்மானம் எண்.1630 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடஙகில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் நாகர்கோவில் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி பணிகள் மேற்கொள்ள 10 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ள ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் : 1600 நாள். 31.01.2017 –ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 10 நபர்கள் கொண்ட ஸ்டார் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் 89 நாட்களுக்கு ஏப்ரல் 2017 முதல் ஜுன் 2017 வரை பணிக்கு அமர்த்த கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 300000/– க்கு அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/1368/2014

**தீர்மானம் எண்.1631 அஙகீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.6

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால் பொது சுகாதார நலன் கருதி வடிகால் தூர் வாருதல், அபேட் மருந்து தெளித்தல் ஆகிய பணிகள் தினமும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் நாகர்கோவில் அவர்களின் தினக்கூலி பட்டியலின்படி 18 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுய உதவிக்குழு மூலம்

பணிகள் மேற்கொள்ள ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்: 1599 நாள்: 31.01.2017–ல் ஒப்புதல் பெறப்பட்டு பணியமர்த்தப்பட்டது. மேலும் 18 நபர்கள் கொண்ட ஜெயம் பெண்கள் சுய உதவி குழு மூலம் 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.530000/–க்கு அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/1177/2014

**தீர்மானம் எண்.1632 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

குளச்சல் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு, உரக்கிடங்கு மேம்பாட்டு பணிகளுக்காக, குளச்சல் கிராமம் புல எண்.204/1–ல் நில உரிமை மாற்றம் செய்யப்பட்ட 2 ஏக்கல் நிலத்தில், பல்வேறு திட்டஙகளின் கீழ் உரக்கிடஙகு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு பணிகள் முடிந்தும், சில பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்துவதற்கு ஏற்கனவே முன் நுழைவு அனுமதி வழஙகப்பட்ட 2 ஏக்கர் நிலத்துடன், கூடுதலாக 3 ஏக்கர் நிலமும் சேர்த்து ஆக மொத்தம் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது.

மேலும் இந்நகராட்சியில் கழிவு நீர், நீர்நிலைகளில் கலப்பதை தடுக்கும் பொருட்டு, பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ.2415.00 இலட்சத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு வழஙகும் பட்சத்தில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewerage Treatment plant)அமைத்து பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்ற 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது.

எனவே குளச்சல் நகராட்சி மக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு, மேற்படி திட்டஙகளை நிறைவேற்ற நகராட்சிக்கு தகுதியான எந்த ஒரு இட வசதியும் இல்லாததால், குளச்சல் கிராமம் புல எண்.204–ல் 4.05.00 ஹெக்டேர் நிலத்தை சிறப்பினமாக பரிசீலித்து நில உரிம மாற்றம் செய்து நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டி அரசை கேட்பது தொடர்பாக.

ந.க.எண்.524/2012/எச்1

**தீர்மானம் எண்.1633 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530 –ல் பழுதுகள் ஏற்பட்டதால், வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டது. எனவே அலுவலகப் பணிகளில் மேற்படி வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மகேந்திரா & மகேந்திரா–வின் அங்கீகாரம் பெற்ற M/S.KODAI CARS(P) Ltd., நிறுவனத்தில் வாகனம் பரிசோதனை செய்யப்பட்டதன் அடிப்படையில் பெறப்பட்ட ரூ.1,05,000/–க்கான விலைப்புள்ளியின் படி, பணியின் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,05,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/5030/2010

**தீர்மானம் எண்.1634 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சியில் அடிப்படை வசதிகள் இல்லாமல் நகராட்சி ஆணையரின் அறை உள்ளதை மாற்றி அடிப்படை வசதிகள் ஏற்படுத்திடவும், அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட ரூ.2.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ1/592/2017

**தீர்மானம் எண்.1635 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மின் ஆட்டோ வாகனம் எண்.TN 75 P8424 –க்கு தகுதி சான்று புதுப்பிப்பதற்கான கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.4000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. மேலும் பணிகளின் விவரம் பின்வருமாறு.

1. ஆயில் சேஞ்சு செய்தல்
2. டோர் ஜன்னல் மற்றும் கைப்பிடி ரிப்பேர் செய்தல்
3. டோர் லாக் மாற்றம் செய்தல்

4. வைபர் ரிப்பேர் செய்தல்
5. செல்ப் மோட்டார் ரிப்பேர்
6. டைனமா வீனஸ்
7. பின்பக்க தொட்டி டோர் ரிப்பேர் செய்தல்
8. கேபிள் முழுவதும் மாற்றம் செய்தல்
9. சீட்டு ரிப்பேர் செய்தல்
10. ஷாக்கப்சர் மாற்றம் செய்தல்
11. ஒயரிங செக்கப் செய்தல்
12. பெயின்டிங செய்தல்
13. ஹேன்பிளாக் ரிப்பேர் செய்தல்
14. பம்பு நாசிங சரி செய்தல்

அ.கு 1. மேற்படி பழுது பார்க்க ஆகும் உச்சவரம்பு தொகை விட அதிகமாக உள்ளதால் மேற்படி கூடுதலாக செலவு செய்யப்படும் தொகைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனம் மூலம் தகுதி சான்று பெறவும் ஒப்புதல் வாஙகலாம்.

ந.க.எண்.எச்1/1407/2014

**தீர்மானம் எண்.1636 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் எதிர்வரும் வறட்சியை சமாளிக்கும் பொருட்டு, பழுதடைந்துள்ள மின்மோட்டார்கள், பேனல் போர்டுகள் மற்றும் வால்வுகளுக்கு மாற்றாக புதியதாக மின் மோட்டார்கள், பேனல் போர்டுகள் மற்றும் வால்வுகள் கொள்முதல் செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,95,000/–க்கு மன்றத் தீர்மானம் எண்; 1616 நாள்; 28.02.2017–ன் மூலம் ஏற்கனவே அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 22.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.08% குறைவு |
| 2 | திரு.S.வரதராஜன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 1.17% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.08% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி,

மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழஙகியுள்ளதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/349/2017

**தீர்மானம் எண்.1637 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 தொடர்பான அறிவிப்பை தின பூமி நாளிதழின் 21.03.2017—ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் ரூ.13,536/—ஐ வழஙக கேட்டு தினபூமி நாளிதழ், மதுரை அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை IEC Activities நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழஙகுவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/368—1/2017

**தீர்மானம் எண்.1638 அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணஙகள் பழைய விகித படி சிறுநீர் கழிக்க ரூ.0.50 பைசா, மலம் கழிக்க ரூ.1.00/— நிர்ணயம் செய்து அதனடிப்படையில் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது குத்தகை விகித சாரத்தின் படி கழிப்பிட கட்டண தொகையினை கீழ்கண்ட விவரப்படி 01.04.2017 முதல் உயர்வு செய்து வசூல் செய்ய மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| இனம் | பழைய தொகை | திருத்தியமைக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| சிறுநீர் கழிக்க | 0.50 | 1.00 |
| மலம் கழிக்க | 1.00 | 2.00 |

ந.க.எண்.அ1/336/2015

**தீர்மானம் எண்.1639 அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண்.14

இந்நகராட்சி குடிநீர் விநியோக துணை விதிகள் தொடர்பான விளம்பரத்தை 29.03.2017 தேதி பதிப்பில் வெளியிட்ட வகையில் கீழ்காணும் விவரப்படி பட்டியல் தொகை ரூ.21,960/—ஐ இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1) தமிழ்ச் சுடர்<br>பட்டியல் எண்:<br>1318, நாள்: 29.03.2017 | ரூ.12,000/— |
| 2) தினமணி<br>பட்டியல் எண் :<br>675761/TVL<br>நாள் : 29.03.2017 | ரூ.9,960/— |

மொத்தம் ரூ. 21960/—

ந.க.எண்.இ2/7063/2011

தீர்மானம் எண்.1640 அஙகீகரிக்கப்பட்டது.

பொருள் எண்.15

இந்நகராட்சியிலுள்ள கணினிகள் சர்வர் மற்றும் பிரிண்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட 2017—18—ம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் (AMC) மேற்கொள்ள, அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.73,000/—க்கு மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.அ2/544/2006

தீர்மானம் எண்.1641 அஙகீகரிக்கப்பட்டது.